[1992 செப்டம்பர் 21

18—

காஞ்சிபுரம் பகுதியிலுள்ள வேளாளர் இனத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

*10134—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காஞ்சிபுரம் பகுதியில் உள்ள தொண்டை மண்டல ஆதி சைவ வேளார் இனத்தைச் சார்ந்தவர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவரவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில், எல்லாச் சமுதாய மக்களையும் அழைத்துப் பேசினார்கள். அந்த வகையில், அவருடைய வாரிசு, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் தொண்டை மண்டல ஆதிசைவ வேளாளர் இனத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவது பிற்பட்டோர் நலக் குழு, இந்தச் சமூகத்தினரைப் பின் அடைந்தவர்கள் அல்லர் என்று குறிப்பிட்டிருக்கிறது. அதே போன்று இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு, குழு நிர்ணயித்த குறைந்த பட்ச மதிப்பெண்களைவிட மிகக் குறைவாகப் பெற்றிருக்கிறது. மேலும், சமூக நிலை, கல்வி நிலை, பொருளாதார நிலைகளைப் பற்றிய சதவீதங்களைப் பார்க்கும்பொழுதும், மாநில சராசரியைவிட சைவ வேளாளர் வகுப்பினர் முன்னேறிய நிலையில் உள்ளனர் என்பதை இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு சுட்டிக் காட்டுகின்றது. எனவே இக்கோரிக்கை ஏற்புடையது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு பி. வி. இராஜேந்திரன்

1992 செப்டம்பர் 21]

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகள் தொடர்ந்து எழுந்து கொண்டு இருப்பதற்குக் காரணமே, நமது அரசு மூன்றாவது பேக்வேர்ட் கிளாசஸ் கமிஷன் ஒன்றைப் போடாததுதான். இரண்டாவது, இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு டாக்டர் அம்பாசங்கர் தலைமையிலே நியமிக்கப்பட்டதை. டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கின்றபொழுதே அந்தக் கேபினெட் அதை நிராகரித்து, அந்தக் கிடப்பிலே போடுவோம் என்று நிறுத்திக்கூட வைத்து இருக்கின்றனர். எனவே, நாம் அதை ஒரு அளவாக எடுத்துக் கொள்ள முடியாது. மாண்புமிகு முதல்வரவர்கள் இதைப் பரிசீலித்து, மூன்றாவது பிற்பட்டோர் நலக் குழுவை ஏற்கனவே அவர்கள் ''நான் பரிசீலித்து முடிவு எடுக்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறார்கள், உடனடியாக அப்படி ஒரு கமிஷனை அவர்கள் அமைக்க வேண்டும். அதிலே, பொருளாதாரத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒன்றை சொன்னார்கள். பொருளாதாரம் ஒரு அளவுக்கோலாக இருக்கமுடியாது, என்று நான் நினைக்கின்றேன். இந்திய அரமைப்புச் சட்டப்படிகூட கல்வி மற்றும் சோஷியல் அன்ட் எஜுகேஷனல் என்றுதான் இருக்கிறது. மற்றும் சமூக நீதி என்றுதான் இருக்கிறது. அதையும் பின்பற்றி மூன்றாவது நலக் குழு அமைக்கப்படுமா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கு 1985 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மொத்தத்தில் 50 சதவீத இட ஒதுக்கீடு ஆணைக்கு எதிராகவும், 1989 ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 சதவீதம் இட ஒதுக்கீட்டுக்கு எதிராகவும் உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள ரிட் மனு மீது தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னர் இது குறித்து மேற்கொண்டு பரிசீலனை செய்யப்படும். மேலும் பிற்பட்ட, மிகப் பிற்பட்டோர், சீர் மரபினர்களின் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இது குறித்து 3-வது குழு அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்துள்ளார்கள். எனவே, 3-வது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு அமைக்கப்பட்டதும் இது குறித்து ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 19 திரு. ஆர். கோடிமாரி, மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

19—

நாகப்பட்டினத்தில் மீன்பிடித்துறைமுகம்.

*10202—திரு ஆர். கோடிமாரி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—